**வெலிகந்த பிரதேச சபை**
**பொலன்னறுவை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமா்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 27 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமா்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தம்பர் 19 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வெலிகந்த பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினனயும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

களஞ்சிய பொருட்கள் சம்பந்தமாக பின்பற்றப்பட வேண்டிய களஞ்சிய முற்பணக்கணக்கு முறைமை பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாகாண வீதிகள் வாரம் 2017 செயற்திட்டத்திற்காக செலுத்தப்பட வேண்டியிருந்த ரூபா 1,109,091 வேலை கடன்கொடுத்தோர் கணக்குகளிலிருந்து கைவிடப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிலே திசெம்பர் 31 ஆம் திகதியில் நிலுவையாக இருந்த நீர் வருமானம் ரூபா 809,601 கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டிலே திசெம்பர் 31 ஆம் திகதியில் ரூபா 211,572 மொத்தம் அட்டுறு செலவில் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) வட மத்திய மாகாண சபையினால் நிர்மானிக்கப்பட்டிருந்த பிரதேச சபை காரியாலயம் இயங்குகின்ற கட்டிடத்தின் பெறுமதி கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) சபைக்கு சொந்தமான பெகோ லோடர் இயந்திரத்தை வாடகைக்கு வழங்குவதன் மூலம் கிடைக்க வேண்டிய ரூபா 52,400 கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) சபைக்குரிய வெலிகந்த விவசாய பொருளியல் மத்திய நிலைய கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட கிரயத்தை இனங்கண்டு கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) கழற்றி அகற்றப்பட்ட காரியாலய வாகனத்தின் தரிப்பிடத்தின் கிரயமான ரூபா 601,720 கணக்குகளிலிருந்து நீக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) சபைக்கு சொந்தமான செவனபிட்டிய வாராந்த சந்தைக் காணியில் மழை நீர் வடிந்து செல்வதற்கான வடிகால் கட்டமைப்பை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட ரூபா 216,700 மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) காரியாலய வாகன தரிப்பிட நிர்மானத்திற்காக மீளாய்வாண்டிற்குள் செலவிடப்பட்டிருந்த ரூபா 180,000 மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) நீர் சேமித்து வைக்கும் தாங்கிகள் இரண்டினை வைக்கக் கூடிய வகையில் திட்டமிட்ட நிர்மானிப்புக்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 1,459,796 மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஓ) ஊழியர்களின் கடன் ஏட்டின்படி மீளாய்வாண்டிலே மூன்று ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 22,645 கடன் மீதிகள் நிதிக்கூற்றுக்களில் கைவிடப்பட்டிருந்தது.

(ஔ) மீளாய்வாண்டிலே நீதிமன்ற தண்டப்பண வருமானத்திற்குள் 2016 திசெம்பர் மாதத்திற்கு உரிய நீதிமன்ற தண்டப்பண வருமானம் ரூபா 272,083 உள்ளடக்கப்பட்டதன் காரணமாக வருடத்தின் வருமானம் அந்த பெறுமதியினால் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது.

(ஃ) மீளாய்வாண்டிலே முத்திரைக் கட்டண வருமானத்திற்குள் 2016 ஆம் வருடத்தின் நவம்பர் மாத முத்திரைக் கட்டணம் ரூபா 159,000 பதிவு செய்யப்பட்டதன் காரணமாக வருடத்தின் வருமானம் அந்த பெறுமதியினால் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது.

### 1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### (அ) பெற வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் அறுதியில் 01 வருடத்திற்கு அதிகமாக பெறவேண்டிய கணக்குகளின் மீதிகள் இரண்டின் மொத்தம் ரூபா 525,715 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 476,695 ஆனது வருடங்களை கடந்திருந்தது.

#### (ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் இறுதியில் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்த செலவு கடன்கொடுத்தோர் மீதிகள் 04 க்கு உரிய மொத்தம் ரூபா 468,474 பெறுமதி 2005 ஆம் வருடத்திலிருந்து தீர்வு காணப்படாமல் முன்கொண்டு வரப்பட்டிருந்தது.

### 1.3.4 கணக்காய்விற்கு தேவையான எழுத்துமூல சான்றுகளின்மை

#### (அ) தகவல்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்காமை

தேவையான தகவல்களை சமர்ப்பிக்காமையினால் ரூபா 232,782,136 தொகையான 08 கணக்கு விடயங்கள் கணக்காய்வின்போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள்**

---

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் | | |
| (i) 152 (i) பிரிவு | 33,000 | சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் ஸ்தாபிக்கப்பட்டுள்ள தொலைபேசி தொடர்பாடல் கோபுரங்கள் 11 க்காக மீளாய்வாண்டிலே வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1988 இன் 56 ஆம் இலக்க சுற்றாடல் சட்டம். | | சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்கு தேவையான நிறுவனங்களை அடையாளங்கண்டு அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், முன்னைய ஆண்டுகள் மற்றும் மீளாய்வாண்டிலே காலாவதியாகியிருந்த சுற்றாடல் பாதுகாப்பு, அனுமதிப்பத்திரம் சம்பந்தமாக பின்விபர நடவடிக்கைகள் இடம் பெற்றிருக்கவில்லை. |
| (இ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக விதிகள்) | | |
| (i) விதி இலக்கம் 59 இலிருந்து 63 வரை | | சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் கணக்கெடுப்பொன்றை நடாத்தி தொழிற்சாலை மற்றும் வியாபார சம்பந்தமான பட்டியலொன்றை தயாரித்து கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. |
| (ii) விதிகள் 203 | | 2009 ஆம் வருடத்திலிருந்து 2017 ஆம் வருடம் வரை சபையினால் பொருட்கள் கணக்கெடுப்பை நடாத்தி அறிக்கையை கணக்காய்வாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) விதிகள் 212 | 3,544,414 | மீளாய்வாண்டிலே கொள்வனவு செய்யப்பட்டிருந்த 70 பொருட்கள் |

விடயங்களுக்கு பதிவுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை

| | | | |
|---|---|---|---|
| (i) | நிதிப்பிரமாணம் 104 | | மீளாய்வாண்டிலே இடம் பெற்ற வாகன விபத்து சம்பந்தமாக ஆரம்ப அறிக்கை மற்றும் இறுதி பரிசோதனை அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிதிப்பிரமாணம் 110 | | வாகன விபத்துக்கள் சம்பந்தமான சேதங்களை பதிவதற்கான பதிவேடு பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிதிப்பிரமாணம் 371 2(இ) | 202,000 | சபையின் செயலாளரினால் 9 சந்தர்ப்பங்களில் பெறப்பட்டிருந்த முற்பணங்களை 05 மாதங்கள் தொடக்கம் 11 மாதங்கள் வரையான காலம் தாமதித்து செலுத்தப்பட்டிருந்தது. |
| (iv) | நிதிப்பிரமாணம் 880 | | பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை பெறப்பட்டிருக்கவில்லை. |
| (v) | நிதிப்பிரமாணம் 1674(உ) | | வாகனத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தர் மூலமாக தமது பொறுப்பிலுள்ள மோட்டார் வாகனங்கள் சம்பந்தமாக அந்தந்த வாகனத்தின் வகை வடிவமைப்பு பதிவு இலக்கம், தமக்கு பொறுப்பளித்த திகதி, அது சம்பந்தமான விபரங்கள் மற்றும் வேறு சரியான தகவல்கள் உள்ளடக்கிய பதிவேடொன்று பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. |

(உ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பெறுகைகள் வழிகாட்டிக்கோவை

-----------------------------------

| | | | |
|---|---|---|---|
| (i) | 2.8.1 வழிகாட்டல்கள் | | சபையினால் தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழு தெரிவு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 2.11.3 வழிகாட்டல்கள் | | குழுக் கூட்டங்களின் போது அறிக்கைப்படுத்தப்பட்ட பெறுகைகள் கையேட்டில் அடங்கியுள்ள நிலையான வடிவத்திற்கு அமையஅறிக்கைப்படுத்தப்பட்டு வருகை தந்த உறுப்பினர்களினால் சான்றுறுதிப்படுத்தப்பட வேண்டியிருப்பினும் |

| | | |
|---|---|---|
| | | சபை அதன்படி நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. |
| (iii) | 4.2.1 (அ) வழிகாட்டல்கள் | சபையினால் மீளாய்வாண்டிற்காக பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | சுற்றுநிரூபம் மற்றும் கடிதம் 2015 திசெம்பர் 04 ஆம் திகதிய மாகாண சபைகள் ஆணையாளரின் இலக்கம் என்சிபி/எல்ஜி/ஏசீ/4/1/2 உடைய கடிதம் 374,775 | தலைவருக்கு ஒதுக்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ வாகனம் 2015 திசெம்பரிலிருந்து மாதத்திற்கு 150 லீற்றர் எரிபொருள் என்ற உச்ச அளவின் கீழ் செயலாளருக்கு பாவனைக்குட்படுத்த முடியுமெனினும் அதற்கு அநுகூலமற்ற முறையில் எரிபொருள் பாவனைக்கு உட்படுத்தியதன் காரணமாக மீளாய்வாண்டிலே 3,649 லீற்றர் எரிபொருள் மேலதிகமாக பாவனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் வருமானத்தை விஞ்சிய செலவினம்ரூபா 770,804 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,135,860 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i. | வீதவரியும் வரியும் | 909,600 | 365,000 | 365,000 | - | 1,385,000 | 516,209 | 516,209 | - |
| ii. | வாடகை | 5,667,900 | 4,495,116 | 2,823,900 | 2,562,014 | 13,034,900 | 3,749,500 | 4,669,361 | 1,999,118 |
| iii | அனுமதிப்பத் திரக் கட்டணங்கள் | 1,067,500 | 326,720 | 330,450 | 651,475 | 933,750 | 200,760 | 201,260 | 654,800 |
| iv | ஏனைய வருமானம் | 30,639,400 | 5,053,016 | 17,610,917 | 11,938,714 | 22,109,100 | 5,742,665 | 17,653,745 | 5,711,681 |
| | | 38,284,400 | 10,239,852 | 21,130,267 | 15,152,203 | 37,462,750 | 10,209,134 | 23,040,575 | 8,365,599 |

### 2.2.2 வருமானம் சேகரித்தலின் செயலாற்றல்

2017 ஆம் வருடத்திற்கான மொத்த மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 38,284,400 ஆக இருந்தாலும் சிட்டையிடப்பட்ட வருமானம் ரூபா 10,239,852 இருந்ததால் ரூபா 28,044,548 அதிகமாக மதிப்பிடப்பட்டது அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டிலே திசெம்பர் 31 ஆம் திகதியில் மொத்த நிலுவை வருமானம் ரூபா 15,152,203 ஆகும்.

### 2.2.3 வீதவரியும் வரியும்

மீளாய்வாண்டிற்காக குப்பை வரி அறவிடுவதற்கு சபை நடவடிக்கை மேற்கொள்ளாதிருந்ததுடன் 94 நிறுவனங்களில் அறவிடப்பட வேண்டிய நிலுவை குப்பை வரி வருமானம் ரூபா 475,200 ஆகும்.

### 2.2.4 வாடகை

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) செவனபிட்டிய நகரத்தில் உப குத்தகை வழங்கப்பட்டிருந்த 19 கடைகளிலிருந்து சபைக்கு கிடைக்க வேண்டிய நிலுவை வாடகை ரூபா 833,247 ஆக இருப்பினும் அதற்காக பிரதேச சபை சட்டத்தின் 159(1) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்குச் சொந்தமான பெகோலோடர் இயந்திரத்திற்காக பிபிதெமு பொலன்னறுவை அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் ஊடாக அறவிடப்பட வேண்டிய ரூபா 52,400 வை அறவிடுவதற்கு சபை நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

(இ) வெளிகந்த வாராந்த சந்தையை வாடகைக்கு வழங்குதலின் கீழ் டெண்டர் பணத்தின் மீதி 50 சதவீத பணமான ரூபா 805,750 வை 2017 ஜுன் 30 ஆம் திகதிக்கு முன் டெண்டரை பெற்றவரினால் சபைக்கு செலுத்த வேண்டியிருப்பினும் 2018 ஜனவரி 18 ஆம் திகதியாகும் போது ரூபா 98,152 நிலுவை பணமாகவும் மற்றும் அதனால் ரூபா 18,801 தண்டப் பணமாகவும் அறவிடப்பட வேண்டியுள்ளது.

### 2.2.5 ஏனைய வருமானம்

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் 25 பல்வேறு நிறுவனங்களினால் காட்சிப்படுத்தப்பட்டுள்ள 33 விளம்பர அறிவித்தலுக்காக மீளாய்வாண்டிற்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 285,612 விளம்பரப்பலகைக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2009 ஏப்ரலில் 17 ஆம் திகதி 1597/8 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் (v) ஆவது உப ஏட்டின் பிரகாரம் தொலைபேசி கோபுரம் நிர்மானித்தலுக்காக கட்டணம் அறவிடப்பட வேண்டுமெனினும் சபையின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் நிர்மாணிக்கப்பட்டுள்ள 09 தொலைபேசி தொடர்பாடல் கோபுரங்களுக்கு கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையின் கட்டுப்பாட்டு பிரதேசத்தின் வடுமுனே பாதை வடுமுனே மங்கட, வெளிகந்த ஆகிய இடங்களில் மணல் அகழ்வு நடவடிக்கைக்காக பயன்படுத்தப்படும் 2 ½ - 3

ஏக்கர் அளவான பூமி பிரதேசத்திலே நாளொன்றிற்கு 125 க்கும் 150 க்கு மிடையிலான அளவில் டிப்பர் வாகனங்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தபோதிலும் வாகன தரிப்பிடத்திற்கான அடிப்டை வசதிகளை முறையாக ஏற்படுத்தி கட்டண அறவீட்டை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கவில்லை.

(ஈ) சபையின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் நிறுவப்பட்டுள்ள 06 முச்சக்கர வண்டி தரிப்பிடத்திலிருந்து அறவிடப்பட வேண்டிய முச்சக்கரவண்டி பதிவுக் கட்டணத்தை அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 03 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல்கள் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) உப விதிகள்**

பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பந்தியின் கீழ் 13 பிரதான விடயங்கள் நிறைவேற்றுவதற்காக அவசியமான உப விதிகள் விதிக்கப்பட வேண்டுமென அடையாளங் காணப்பட்டிருப்பினும் 2017 திசெம்பர் 31 ஆம் திகதியாகும் போதும்ஒரு உபவிதியேனும் விதிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செயல் நடவடிக்கைத் திட்டம்**

சபையினால் நிறைவேற்றிக் கொள்ளப்படவேண்டியிருந்த விடயங்களை இனங்கண்டு அதற்கான வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்றை தயாரித்திருக்கவில்லை.

**(இ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) இலங்கை மகாவலி அதிகாரியினால் சபையின் குப்பைகளை கொட்டுவதற்காக 2017 ஆம் வருடத்திலே வழங்கப்பட்டிருந்த சேனபுர, எதாகல பிரதேசத்தின் 05 ஏக்கர் திலத்தை 2017 ஜுன் மாதமாகும் போது, அளவீட்டு நடவடிக்கைகளை நிறைவு செய்து இருந்தாலும், நிலத்தின் உரிமையை சட்டப்படியாக பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) சபையினால் அன்றாடம் சேகரிக்கப்படும் குப்பைகளை கொட்டுவதற்காக முறையான திட்டமொன்றை பின்பற்றாமல் அல்லது பொலித்தீன், பிலாஸ்டிக் மற்றும் கண்ணாடி உட்பட்ட திண்மக் கழிவுகளை வகைப்படுத்துவதற்கு உட்படுத்தப்படாது வெளிகந்த நகருக்கு அண்மையில் சிங்ஹபுர 1 ஆம் கட்டை பிரதேசத்தில் அமைந்துள்ள திறந்த பூமி பூராகவும் முறையற்ற வகையில் கொட்டப்பட்டிருந்தது. அந்த இடம் காட்டு யானைகள் பெருமளவு நடமாடும் இடமாக மாறியுள்ளதுடன் ஈக்கள், நுளம்புகள் பெருகுதல், மழைக்காலங்களில் கழிவுகள் நீர் மூலங்களில் ஒன்று சேர்த்தல் அதிக துர்நாற்றத்தையும் மற்றும்

பொலித்தீன் போன்ற உக்காத கழிவுகள் பூமி பூராகவும் பரந்து காணப்படுதல், சுகாதார மற்றும் சுற்றாடல் பிரச்சினைகள் பலவற்றை உருவாக்கி இருப்பது 2018 ஜனவரி மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட பௌதிக பரீசிலனையின் போது அவதானிக்கப்பட்டது.

(iii) குப்பைகளை வேறுபடுத்தி பெற்றுக்கொள்ளல், வகைப்படுத்தலை மேற்கொள்ளல் உக்கக்கூடிய கழிவுகளை பயன்படுத்தி கொம்போஸ்ட் உற்பத்திகளை மற்றும் விற்பனைகளை மேற்கொள்ளல்,என்பன மாகாண சபைகளின் நிறுவனங்கள் நிறைவேற்ற வேண்டிய அத்தியாவசியமான சேவையாக குறிப்பிடப்பட்டிருந்தும் முறையான கழிவு முகாமைத்துவ திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு சபையின் கவனம் ஈர்க்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

ஐக்கிய நாடுகளின் அமைப்பின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட நிலைபேறான அபிவிருத்தியின் நோக்கங்கள் சம்பந்தமாக சபை அறிந்திருக்கவில்லை. என்பதுடன், சபைக்கு உரித்தான நோக்கங்கள் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான தேவையான ஏற்பாடுகள், அதற்காக தேவையான ஊழிய பதவியணியினர் மற்றும் ஏனைய தொடர்புள்ள அரச நிறுவனங்கள் என்பவற்றை இனங்கண்டிருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 ஆம் வருடத்திலே சபையினால் ரூபா 244,303 செலவிட்டு 4687 உள்ளகப் பிணைப்பு கொங்ரீட் கல் பிடித்து அபிவிருத்தி செய்யப்பட்ட 261 – செவனபிடிய துலானே அமைந்துள்ள சமூர்த்தி வங்கிக்கு அண்மையில் இருந்து தபால்கந்தோர் வரையான பாதை 2017 ஆம் வருடத்திலே பிபிதெமு பொலன்னறுவை வேலைத்திட்டத்தினால் அங்கு இடப்பட்டிருந்த கொங்ரீட் கற்களை களற்றி அகற்றி மீண்டும் அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தது. அதன் போது களற்றி அகற்றப்பட்ட கொங்ரீட் கற்களை மாவட்ட செயலாளர் காரியாலயத்தினால் சபைக்கு பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

(ஆ) அதிகார பிரதேசத்திற்குள் பொருத்தப்பட்டுள்ள வீதி மின் விளக்குகள் சம்பந்தமான விபரங்கள் அடங்கிய பதிவேடொன்று சபையினால் பராமரிக்கப்பட்டிருக்கவில்லையென்பதுடன் சபைக்கு சொந்தமான வீதி விளக்குகளின் எண்ணிக்கை மற்றும் திருத்தியமைக்கப்பட்ட விளக்குகளின் எண்ணிக்கை என்பவற்றை உறுதி செய்து கொள்ள முடியாதுள்ளது. இதற்கு மேலதிகமாக வீதி விளக்குகளை திருத்தியமைப்பதற்கான கிடைக்கப் பெறுகின்ற வேண்டுகோளையும் ஏடுகளில் உள்ளடக்கியிருக்கவில்லை.

(இ) சபையினால் பாவணைக்குட்படுத்தியுள்ள 3 வாகனங்களின் உரிமையை மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

(ஈ) களஞ்சிய பொருட்களை முறையாக பொதி செய்யப்படாமல் புதிய சபைக் கட்டிடத்தின் அருகாமையில் உடைந்த கட்டிடத்தில் ஆங்காங்கு குவிக்கப்பட்டிருந்தது.

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

**(அ) ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மீளாய்வாண்டிலே மூன்றாம் நிலைக்குரிய செயலாளர் பதவி, இரண்டாம் நிலைக்குரிய 06 அபிவிருத்தி உதவியாளர் பதவிகள், முகாமைத்துவ உதவியாளர் பதவி ஒன்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவி ஒன்றும் மற்றும் வருமான நிர்வாக பதவி 01 உம் வெற்றிடமாக காணப்பட்டன.

(ii) அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கைக்கு மேலதிகமாக ஒட்டுனர் ஒருவர், வீதி வேலையாளர் ஒருவர்சுகாதார சேவையாளர் ஒருவர், மற்றும் நூலக வேலையாளர் ஒருவர் சேவைக்கு உள்ளீர்க்கப்பட்டிருந்தனர்.

(iii) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினருக்கு மேலதிகமாக மாற்றீடு அடிப்படையில் 03 சுகாதார சேவையாளர்களும், ஓட்டுனர் ஒருவரும், 02 காவலாளிகளும், நீர்மாணி வாசிப்பாளர் ஒருவரும் ஆட்சேர்க்கப்பட்டிருந்ததுடன் அதில் 03 ஊழியர்களுக்காக மாகாண சபைகள் ஆணையாளரின் எழுத்து மூல அங்கீகாரம் காணப்படவில்லை.

(iv) வருமானம் நிர்வாக பதவி பல வருடங்களிலிருந்து வெற்றிடமாக காணப்படுவதுடன் இந்த பதவிக்காக அடிக்கடி ஆரம்ப நிலைக்குரிய ஊழியர் (காரியாலய காரிய உதவியாளர்) நியமிக்கப்பட்டிருந்தது.

**3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

செவனபிட்டிய நகரத்திலிருந்து வெலிகந்த நகர் வரை மட்டக்களப்பு கொழும்பு பிரதான பாதை மற்றும் புகையிரத பாதைகளுக்கிடையில் உள்ள பாதை பாதுகாப்பு மற்றும் புகையிரத பாதுகாப்பு பிரதேசத்திற்குள் சுமார் 8 கி.மீ வரை அனுமதியற்ற முறையில் 19 வீடுகள், 100 க்கு அண்மித்த அளவான வியாபார கடைகள் மற்றும் 35 வேறு வியாபார நிலையங்கள் என்பன நிர்மாணிக்கப்பட்டிருந்தாலும் சபையினால் இந்த அனுமதியற்ற நிர்மாணங்கள் சம்பந்தமாக எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**3.5 மோசடித் தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

மக்கள் உபயோகத்திற்காக திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்தினால் 2014 ஆம் வருடத்திலே சபைக்கு வழங்கப்பட்டிருந்த 368 கெல்வணைஸ் கொடி கம்பங்களில் முன்பு இருந்த தலைவர் மற்றம் மந்திரிமார்களால் எடுத்துச் செல்லப்பட்ட 213 கொடி கம்பங்கள் உட்பட ரூபா 283,428 பெறுமதியான 256 கொடி கம்பங்களை சபைக்கு மீண்டும் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

**3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.6.1 விளைவற்ற மற்றும் குறை உபயோகமான சொத்துக்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்கு சொந்தமான 2 ட்ரெக்டர் வாகனங்கள் 01 முதல் 03 வரையான காலத்திலிருந்து செயலிலந்து காணப்படுவதுடன் அதை முறையாக திருத்தங்களை மேற்கொண்டு சபையின் நடவடிக்கைகளுக்கு ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கவில்லை.

(ஆ) 2008 ஏப்ரலில் 17 அந் திகதி மற்றும் 2009 பெப்ரவரி 24 ஆம் திகதி வட மத்திய மாகாண பிரதான அமைச்சினால் சபைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 613,500 பெறுமதியான அரிசி மாவினாலான உற்பத்தி உபகரண தொகுதி 9 வருடங்களுக்கு அதிக காலமாக உபயோகப்படுத்தாமல் அழிவடைந்து கொண்டிருக்கின்றது.

(இ) தேசிய நீர் விநியோக மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் கழற்றி அகற்றி சபைக்கு பெற்றுக்கொடுத்த மீண்டும் உபயோகப்படுத்த முடியுமான குழாய் கிணறு உபகரணங்களை முறையற்ற விதத்தில் களஞ்சியததில் குவிக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2007 ஆம் வருடத்திலே பிலிசறு செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக ரூபா 750,000 செலவிட்டு வெலிகந்த வாராந்த சந்தை பூமிக்குள் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடம் 10 வருடங்களுக்கு அதிகமான காலமாக விளைவற்று காணப்பட்டது. தற்போது இந்த கட்டிடத்தில் நிர்மாணிக்கப்பட்ட கொங்ரீட் கம்பங்கள் சிலவும் மற்றம் சுவர் பகுதி மட்டும் எஞ்சியுள்ளது. கட்டிடத்தை மீண்டும் திருத்தங்களை மேற்கொண்டு பிரயோசனப்படுத்துவதற்கு சபையின் கவனம் ஈர்க்கப்பட்டிருக்கவில்லை.

### 3.7 வெளிப்படையான மோசடிகள்

செவனபிட்டிய கடைகளின் நிலுவை வருமானத்தை அறவிடும் போது 2015 மற்றும் 2016 வருடங்களிலே ரூபா 460,600 வுக்கு அண்மித்த தொகையொன்று 2008 ஆம் வருடத்திலிருந்து வேலை பார்க்கும் வருமான நிர்வாகியாக கடமை புரிந்த உத்தியோகத்தர்களினால் மோசடி செய்யப்பட்டுள்ளதாக விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டாலும் அது சம்பந்தமாக இதுவரை நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கவில்லை.

### 3.8 பெறுகைகள்

#### 3.8.1 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2017 கிராமிய வீதிகள் அபிவிருத்தி வாரம் (மாகாண சபைகள் வீதிகள் வாரம்) செயற்திட்டத்தின் மூலம் அதிகார பிரதேசத்தில் 30.8 கி.மீ வீதிகள் கிரவல் இடப்பட்டு அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 2,150,000 ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஏற்பாட்டில் ரூபா 1,114,667 மாத்திரம் செலவிடப்பட்டு 26.52 கி.மீ பாதை அபிவிருத்தி செய்யப்பட்டிருந்ததுடன் தெரிவு செய்யப்பட்ட அனைத்து கிராமிய பாதைகளுக்கும் கிரவல் இடப்படாமல் மோட்டார் கிரேடர் செய்தல் மற்றும் பக்க காண்களை உருவாக்குதல் மட்டும் இடம்பெற்றதனால் செயற்திட்டம் முடிவடைந்து ஒரு மாதம் கடப்பதற்கு முன் பெரும்பாலான பாதைகளில் மேற்பரப்பிலுள்ள மண் கழுவுண்டு சென்று காடு முளைத்திருந்தது. இதன்படி மாகாண சபைகள் வீதிகள் வாரத்தின் வேலைத்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் பயனுள்ளதாக நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையின் காரியாலய கட்டிடத்திற்கு குடிநீரைப் பெற்றுக்கொள்வதற்காக 5000 லீற்றர் கொள்ளளவு உள்ள நீரைச் சேமிக்கும் 2 தாங்கிகளை நிறுத்தி வைப்பதற்கு முடியுமான அளவில் ரூபா 1,340,313 மதிப்பிடப்பட்ட பெறுமதியிலான நிர்மாணமொன்றை நிர்மாணிப்பதற்காக அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 3.2.1 பிரிவிற்கு அமைய போட்டி அடிப்படையிலான விலை

மனுக்கோரலினால் ஒப்பந்தத்தை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. அதற்குப் பதிலாக நிர்வாகக் குழுவின் தீர்மானத்தின்படி புதிய சபையின் கட்டிடத்தை நிர்மாணிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த ஒப்பந்த நிறுவனத்திற்கு நேரடியாக ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது.

**3.8.2 பெறுகைகள் குழு**

(அ) வேலை பார்க்கும் வருமான நிர்வாகியாக கடமைபுரிந்த உத்தியோகத்தர் 2015 மற்றும் 2016 வருடங்களிலே நிதிமோசடிகளில் தொடர்புள்ளதாக தகவல்கள் உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் 2017 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து 2017 பெப்ரவரி வரை பெறுகைகள் குழு அங்கத்தவராக நியமிக்கப்பட்டிருந்தது. 2017 பெப்ரவரி 05 ஆந் திகதியிலிருந்து 2017 ஆகஸ்ட் 16 ஆந் திகதி வரை காரியாலாய காரிய உதவியாளராக நியமிக்கப்படவிருந்த சேவையாளரும் குழு அங்கத்தவராக நியமிக்கப்பட்டிருந்தது. குழு அங்கத்தவராக சேவையாற்றும் பெண் செயலாளர் மற்றும் வேலை பார்க்கும் பெண் தொழில்நுட்ப உதவியாளரும் உறவினர்கள் ஆவர்.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

மீளாய்வாண்டிலே சபையின் கொடுக்கல்வாங்கல்கள் சம்பந்தமாக உள்ளகக் கணக்காய்வு பரிசோதனையொன்று மேற்கொண்டிருக்கவில்லை.

**4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள்**

சபையினால் மீளாய்வாண்டிலே மற்றும் முயன்னைய வருடத்திலே கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் உருவாக்கி காலத்திற்கு பொருத்தமான கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

**05. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அடிக்கடி சபையின் அவதானத்திற்கு உட்படுத்தப்பட்டிருந்ததுடன் கீழ்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் சம்பந்தமாக விசேட கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது.

| | **முறைமைகள்** | | **குறைபாடுகள்** |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு | (i) | நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரையாக பேணப்பட்டிராமை. |
| | | (ii) | சொத்துக்கள் குறை உபயோகமாக காணப்படுதல். |
| (ஆ) | கணக்கீடு | | வருமான சேகரிப்பு மற்றும் கணக்கிற்கு கொண்டுவருதல் நாளதுவரையாக்கப்பட்டிராமை |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பதவியணியினர் பயன்பாடு | | முறையான ஆட்சேர்ப்பு முறைமையை பின்பற்றாமை மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினருக்கு மேலதிகமாக ஆட்சேர்ப்பை மேற்கொள்ளல். |
| (ஈ) | வருமான நிர்வாகம் | (i) | வருமான பதிவேடு நாளதுவரையாக பேணப்பட்டிராமை |
| | | (ii) | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாமை |
| (உ) | உள்ளகக் கட்டுப்பாடு | (i) | உள்ளகக் கணக்காய்வொன்று இடம்பெறாமை |
| | | (ii) | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் இடம்பெறாமை |
| (ஊ) | கடன்பட்டோர்/ கடன்கொடுத்தோர் | | பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய மீதிகளுக்கு தீர்ப்பனவு மேற்கொள்ளாமை |
| (எ) | வாகன கட்டுப்பாடு | (i) | சுற்றுநிருபத்தின் பிரகாரம் எரிபொருள் பாவனை சம்பந்தமாக பரிசோதனைகள் மேற்கொள்ளாமை. |
| | | (ii) | வாகனங்கள் சம்பந்தமாக கணக்கெடுப்பொன்று இடம்பெறாமை |